# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



95

**சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், கோட்டகவுண்டம்பட்டி ஊராட்சி நிர்வாக அலுவலர்/ ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்.**

**முன்னிலை: திரு. கே.இராஜேந்திரன்.,**

* * * * *

கோட்டகவுண்டம்பட்டி ஊராட்சி ★ ஓமலூர் ஊராட்சி ஒன்றியம் ★ சேலம் மாவட்டம்

அனுமதி எண் /2018–19/க.உ  நாள்.10.02.2019

பொருள்: கட்டிட வரைபட அனுமதி – சேலம் மாவட்டம் – ஓமலூர் ஊராட்சி ஒன்றியம் – கோட்டகவுண்டம்பட்டி கிராமம் புல எண்.85/3A Pt, 85/4B1A1APt, 88/1A1A1A Pt & 85/4B1A1A1 Pt – நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் சேலம் – வீடு கட்டிக்கொள்ள அனுமதியளித்து உத்திரவிடல்.

பார்வை:
1. தமிழ்நாடு ஊராட்சி கட்டிட விதிகள், 1971ன் பிரிவு 10(3) மற்றும் தமிழ்நாடு ஊராட்சி கட்டிட விதிகள் 1997
2. அரசாணை(நிலை)எண்.255/ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் (சி2),துறை,நாள்.18.08.1997
3. இயக்குநர், நகர் ஊரமைப்பு, சென்னை உத்திரவு ந.க.எண்.9862/2010/ பிஏ1, நாள்.14.06.2010.
4. நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் சேலம், என்பவரின் விண்ணப்பம், நாள். .02.2020.
5. மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(மண்டலம்–5), ஓமலூர் என்பவரின் தல ஆய்வு நாள். .02.2020.

\-------

**உத்திரவு**

சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், கோட்டகவுண்டம்பட்டி ஊராட்சி பகுதியில் வசிக்கும் நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சேலம் கோட்டம் என்பவர், கோட்டகவுண்டம்பட்டி ஊராட்சி புல எண்.85/3A Pt, 85/4B1A1APt, 88/1A1A1A Pt & 85/4B1A1A1 Ptல், 6242.00 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட வீடு கட்டிக் கொள்ள அனுமதி வழங்கக் கோரி பார்வை (1)ல் காணும் விபரப்படி விண்ணப்பித்துள்ளார்.

மேற்படியாரின் விண்ணப்பத்தின் மீது பார்வை(5)ல் காணும் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(மண்டலம்–5)ன் தல ஆய்வறிக்கையின் அடிப்படையில், கோட்டகவுண்டம்பட்டி ஊராட்சி புல எண்.85/3A Pt, 85/4B1A1APt, 88/1A1A1A Pt & 85/4B1A1A1 Ptல், நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சேலம் கோட்டம் என்பவருக்கு சொந்தமான நிலத்தில், 6242.00 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட வீட்டினை, இணைப்பில் காணும் வரைபடத்தில் கண்டுள்ளவாறு, கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு கட்டிக் கொள்ள அனுமதித்து இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

**நிபந்தனைகள்.**

1. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள *வரைபடத்தின் (அளவுகள் மற்றும் பிளான்) அடிப்படையில் மட்டுமே கட்டிடம் கட்டப்பட வேண்டும்.* தவறினால் இவ்வுத்திரவு தானாகவே இரத்தாகிவிடும்.
2. மனுதாரர் கட்டிட வரைபட அனுமதி வழங்கப்பட்ட பின்னர், பிளானில் ஏதாவது மாற்றம் செய்து கட்டிடம் கட்டினால், இந்த அனுமதி செல்லத்தக்கதல்ல. தவிர, பின்னிட்டு ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படின் அது இவ்வுத்திரவினை கட்டுப்படுத்தாது.
3. இவ்வுத்திரவு பிறப்பிக்கப்படும் நாளிலிருந்து, அதாவது 10.02.2020 முதல் 09 .02.2021 வரை செல்லத்தக்கதாகும்.

Scanned by CamScanner

4. இவ்வலுவலக உத்திரவு இல்லாமல் கட்டிடத்தினை விரிவுபடுத்தவோ அல்லது மாற்றியமைக்கவோ கூடாது. அவ்வாறு செய்தால், இவ்வுத்திரவு தானாகவே இரத்தாகிவிடும்.

5. குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டிடத்தினை கட்டி முடிக்கப்படவில்லையென்றால் வரைபட அனுமதியை மேலும், ஓராண்டிற்கு புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

6. கட்டிடத்தில் தேவையான அளவு காற்றோட்டம் இருக்குமளவிற்கு கதவு, ஜன்னல்கள் அமைக்கப்பட வேண்டும்.

7. கட்டிடத்தில் மழைநீர் சேகரிப்பு அமைக்கப்பட வேண்டும்.

8. கட்டிடத்தினை சுற்றிலும் போதிய அளவு மரக்கன்றுகள் நடப்பட வேண்டும்.

9. கட்டிடம் கட்டும் போது தவறுகள் நடைபெறாமலும், பெற்ற அங்கீகாரத்தை தவறாக உபயோகித்தாலும், உபயோகப்படுத்தும் பொருட்களில் குறைபாடுகள் இருந்தாலும் அனுமதி உத்திரவு முன் அனுமதியின்றி தள்ளுபடி செய்ய தனி அலுவலருக்கு அதிகாரம் உண்டு.

10. *<u>இந்த அனுமதிக்கான கட்டிடத்தின் அடி நிலம் தொடர்பாக அரசோ அல்லது நகர் ஊரமைப்பு துறையினராலோ, முறைப்படுத்த தெரிவித்தால் அதனை உரிய கட்டணத்துடன் முறைப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு முறைப்படுத்தப்படவில்லையெனில் மேற்படி உத்திரவு பிறப்பிக்கப்படும் நாள் முதல் இந்த அனுமதி செல்லாததாகிவிடும்.</u>*

11. *<u>இந்த அனுமதி மனுதாரரின் கோரிக்கையின்படி வீடு கட்டுவதற்கு அளிக்கப்படும் வரைபட அனுமதி மட்டுமே ஆகும். இதன்பேரில் மனுதாரரின் வீட்டிற்கு குடிநீர், சுகாதாரம், தெருவிளக்கு போன்ற அடிப்படை வசதிகளை உடனடியாக செய்து கொடுப்பதற்கான இசைவு கிடையாது.</u>*

12. அங்கீகாரம் பெற்ற வரைபடத்தினை தணிக்கைக்கு வரும் அதிகாரிகளின் பார்வைக்குபடும் படியாக வைத்திருக்க வேண்டும்.

13. பொதுப்பாதையிலிருந்து கட்டிடத்திற்கு பாதை வசதி அமைக்கப்பட வேண்டும்.

14. இந்த அனுமதியின் அடிப்படையில் கட்டப்படும் வீட்டினை குடியிருப்பு உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். வேறு வணிக நோக்கிலோ, மத சம்மந்தமான நோக்கிலோ பயன்படுத்தக்கூடாது.

15. வேலை முடிந்த 15 தினங்களுக்குள் வேலை முடிந்த விபரத்தினை எழுத்து மூலம் இவ்வலுவலகத்திற்கு தெரியப்படுத்தப்பட வேண்டும்.

16. தனியார் மற்றும் சர்க்கார் நிலத்தின் பேரில் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யக் கூடாது.

17. கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டவுடன் சொத்துவரி நிர்ணயிக்கப்படும்.

18. கட்டிடத்தில் கண்டிப்பாக கழிப்பிடம் கட்டப்பட வேண்டும்.

19. இவ்வுத்திரவு தொடர்பாக ஊராட்சி மன்றத் தனி அலுவலரின் முடிவே இறுதியானது.

நிர்[illegible]ர்/
[illegible]ட்சி.
கோட்ட [illegible]ட்சி.

பெறுதல்
நிர்வாகப் பொறியாளர்,
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்,
சேலம் கோட்டம்,
சேலம்–7

10/02/2020

நகல்: ஊராட்சிக் கோப்பிற்கு.

True copy

EXECUTIVE ENGINEER
Tamil Nadu Slum Clearance Board
Salem Division Salem-7

Scanned by CamScanner

97

சேலம் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் (பொறுப்பு) அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திரு.அ.விஜயன், பி.இ.,
திட்ட அனுமதி
நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 49–ன்கீழ்

---

ந.க.எண். 455/2016 சேஉதிகு | நாள். 24.09.2018.

தி.அ.எண். 23 'அ முதல் இ வரை'/ 2018

உள்ளாட்சியின் பெயர் :ஓமலூர் ஊராட்சி ஒன்றியம்

பொருள்: கட்டிடம் – சேலம் உள்ளூர் திட்டக் குழுமம் – தமிழ்நாடு குடிசை மாற்றும் வாரியம் – சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், கோட்டக்கவுண்டம்பட்டி கிராமம், ச.எண்.85/3ஏபா, 85/4பி1ஏ1ஏ1பா, 88/1ஏ1ஏ1ஏ1பா மற்றும் 85/4பி1ஏ1ஏ1பா–ல் 6242.0 ச.மீ மனையிடத்தில் தரைதளம் + 2 தளங்கள் கொண்ட 5 பிளாக்குகளில் மொத்தம் 216 குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு கட்டுமானத்திற்கு மனை ஒப்புதலுடன் திட்ட அனுமதி வழங்குவது – தொடர்பாக.

பார்வை:
1. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 22148/2016/பிஏ2, நாள். 28.05.2018.
2. 28.03.2018 அன்று நடைபெற்ற 41வது Empowered Committee கூட்ட பொருள் எண்.8–ன் நிகழ்ச்சி பதிவு.
3. உறுப்பினர் செயலர், சேலம் உள்ளூர் திட்டக் குழும கடிதம் ந.க.எண். 455/2016 சேஉதிகு, நாள். 28.07.2017.
4. நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சேலம் கோட்டம் கடிதம் எண்.2654/2/பொ(தி)/2015, நாள்.04.03.201 மற்றும் 08.08.2018.

--------

<u>உத்திரவு</u>

பார்வை 1–ல் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் பார்வை 2–ல் காணும் Empowered Committee கூட்ட நிகழ்ச்சி பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, வளர்ச்சி கட்டுப்பாட்டு விதிகளில் பாதிக்கும் விதிகளை தளர்த்தி அனுமதி வழங்க முடிவு எடுக்கப்பட்டதனைத் தொடர்ந்து, சேலம் உள்ளூர் திட்டக் குழுமப் பகுதி, சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், கோட்டக்கவுண்டம்பட்டி கிராமம், (ஒப்புதல் அளிக்கப்பட்ட வீட்டுவசதி வாரியம் மனைப்பிரிவு எண் **ம.வ/ந.ஊ.இ.எண்.89/2010)** ச.எண்.85/3ஏபா, 85/4பி1ஏ1ஏ1பா, 88/1ஏ1ஏ1ஏ1பா மற்றும் 85/4பி1ஏ1ஏ1பா–ல் 6242.0 ச.மீ பரப்பளவு கொண்ட Land Bank–ஆக ஒதுக்கப்பட்ட மனையிடத்தில் தரைதளம் + 2 தளங்கள் கொண்ட 5 பிளாக்குகளில் மொத்தம் 216 குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு கட்டுமானத்திற்கு,

<u>உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டிட பரப்பு விபரம்</u> :

மனையிடத்தின் மொத்தப் பரப்பு .. 6242.0 சமீ

..2..

Scanned by CamScanner

உத்தேசக் கட்டுமானப் பரப்பு

| விபரம் | பிளாக்–ஏ | பிளாக்–பி |
|---|---|---|
| தரைத்தளம் | 590.08 ச.மீ | 343.64 ச.மீ |
| முதல்தளம் | 590.08 ச.மீ | 343.64 ச.மீ |
| இரண்டாம்தளம் | 590.08 ச.மீ | 343.64 ச.மீ |
| மொத்தம் | 1770.24 ச.மீ | 1030.92 ச.மீ |

பிளாக்–ஏ – 4 எண்கள் = 1770.24 ச.மீ x 4 = 7080.96 ச.மீ
பிளாக்–பி – 1 = 1030.92 ச.மீ x 1 = 1030.92 ச.மீ

---------

5 பிளாக் = 8111.88 ச.மீ

---------

மேற்கண்ட பரப்பளவு கொண்ட உத்தேச குடியிருப்பு கட்டுமானத்திற்கு **க.வ.தி.அ/சேஉதிகுளண்.23 'அ முதல் இ' வரை /2018** என்ற எண்ணில் **24.09.2018** முதல் **5 (ஐந்து)** வருட காலத்திற்கு கீழ்காணும் சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளுடன் நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 49 (2)–ன்படி திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது.

சிறப்பு நிபந்தனைகள்

1. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
2. மத்திய மற்றும் மாநில அரசு துறையினிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.
3. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permission is issued subject to the condition that the applicant / developer and also the Architect / Licensed Surveyor and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.
4. Applicant should obtain consent from Tamil Nadu Pollution Control Board Under Section 25 of the water Act 1974 for discharge of sewage.

Scanned by CamScanner

5. "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரயப்பத்திரம், குத்தகைப் பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகாரப் பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல"

6. "The Provisions in the G.O(MS) No. 17. H&UD [UD4(3)], Department, Dated:05.02.2016 relating to installation and use of solar energy system, should be followed".

7. The Tamil Nadu Government in G.O. MS. No. 112, Housing and Urban Development Department dated : 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Act 2016, The promoter has to advertise, market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate regulatory Authority.

8. Director of Fire and Rescue Services Department NOC from the Director should be obtained for MLCP proposed before issuing planning permission.

9. The equivalent guideline value for the 10% of OSR area should be collected before issuing planning permission.

<u>பொது நிபந்தனைகள்</u>

1. திட்ட அனுமதியானது பிரிவு 49 நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 (சட்டம் 35–1972)–ன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டதாகும்.

2. பிரிவு 79, நகர் ஊரமைப்பு சட்டம் 1971, (சட்ட.ம் 35–1972)–ன்படி எந்த நபராவது இந்த உத்தரவு அல்லது தீர்மானத்தினால் பிரிவு 49 அல்லது 64 (1)–ன்கீழ் மறுக்கப்பட்டிருப்பின் உத்தரவு அளிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் நகர் ஊரமைப்பு இயக்குநர் / அரசுக்கு மேல்முறையீடு செய்யலாம்.

3. சேலம் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் திட்ட அனுமதி அளித்த பிறகு (i) திட்ட அனுமதி பெற தவறான விபரம் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலோ (ii) சட்டப்படி சரியான வழிமுறைகள் கடைபிடிக்கத் தவறியிருந்தாலோ, உறுப்பினர் செயலர், மேற்கண்ட காரணத்தின் அடிப்படையில் திட்ட அனுமதியினை மாற்றவோ ரத்து செய்யவோ உரிமையுண்டு.



Scanned by CamScanner

4. (i) அரசாணை எண். 138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 11.10.2002–ன்படி மழைநீர் சேகரிப்பு குழிகள் வரைபடத்தில் காட்டியுள்ளவாறு அமைக்கப்பட வேண்டும்.

(ii) குளியல் அறை மற்றும் Wash Basinகழிவு நீர் சுத்திகரித்து கழிப்பறைகளுக்கு பயன்படுத்தும் வகையில் சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும்.

5 உத்தேச வணிக கட்டுமானத்திற்கு சூரிய வெப்ப கட்டமைப்பு (Solar Water Heating system) அமைக்கப்பட வேண்டும்.

6. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டுமானத்திற்குFly Ash Bricks & Materialsகண்டிப்பாக பயன்படுத்தப்பட வேண்டும். நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி Clause 2A of Flay Ash Notification 2009பின்பற்றப்பட வேண்டும்.

7. வரைபடத்தில் காட்டியுள்ளவாறு பக்கத்திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.

8. அரசாணை எண். 341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 03.11.2004–ன்படி கட்டிடத்தில் U Trap in the septic tank designஅமைக்கப்பட வேண்டும்.

9. பொருந்தும் இனங்களுக்கு உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வரிய சட்டம் பிரிவு 25 (Water Act)–ன்படி வாரிய இணக்கம் (Consent)பெறப்பட வேண்டும்.

10. கட்டிடத்தில் மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

11. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவைகளுக்கு கொசுத் தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

12. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும் நிறுவனம் மற்றும் பொறுப்பாளர் குடியிருப்புக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் ஆகிய்வற்றை மனுதாரர் தம்சொந்த செலவில் செய்து தர வேண்டும். உத்தேச கட்டுமா்னத்தில் விதிப்படி தேவையான அளவிற்கு தீத்தடுப்பு சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும்.

13. திட்ட அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தின் நகலினை மனையிடத்தின் முன்புறத்தில் எந்நேரமும் பார்க்கத்தக்க வகையில் Lamination செய்து காட்சிக்கு (Display)வைக்கப்பட வேண்டும்.

14. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

15. கட்டிடம் கட்டப்படும் போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஒயரிங் செய்யப்பட வேண்டும்.

16. கட்டிடத்தில் நில அதிர்வை தாங்கும் முறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

..5..

Scanned by CamScanner

17. உத்சேச கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

18. வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும் கூடுதலாகவும் மனையிடத்தில் அபிவிருத்தி செய்து கட்டிடம் கட்டப்பட்டு, அக்கட்டிடத்திற்கு வரிவிதிக்கப்படின், அத்தகைய மீறல்களுககு சம்பந்தப்பட்ட உள்ளாட்சியே (சேலம் மாநகராட்சி உட்பட) பொறுப்பாகும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

திட்ட அனுமதி வரைபடங்களுடன் தேவையான உரிமங்களை மற்ற விதிகளின்கீழ் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியால் மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டும்.

24/9/18

உறுப்பினர் செயலர் (பொ),
சேலம் உள்ளூர் திட்டக் குழுமம், சேலம்.

24/9/18

இணைப்பு
முத்திரையிட்ட வரைபடம் – 2.

பெறுநர்
வட்டார வளர்ச்சி அலுவலர்,
ஓமலூர் ஊராட்சி ஒன்றியம்,
ஓமலூர்,
சேலம் மாவட்டம்.

நகல்
நிர்வாகப் பொறியாளர்,
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்,
சேலம் கோட்டம்,
சேலம்–7.

True copy

AE

AEE

EXECUTIVE ENGINEER
Tamil Nadu Slum Clearance Board
Salem Division, Salem-7

14/2/20.

Scanned by CamScanner

## our services doesn't just end there



### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate